13th August 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : முன்னுல் சொன்னபடி, கலெக்டர் ஸ்பெஷல் ஆபீசராக இருப்பதனுல், இதை ஒரு முக்கிய வேலையாகக் கருதவில்லே. ஆனுல் இப்பொழுது இது ஒரு முக்கிய மான காரியம் என்று சர்க்கார் எல்லா கலெக்டர்களுக்கும் தாக்கீது அனுப்பியிருக்கிறது.

Children's Theatre

* 152 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னேயிலுள்ள பாலர் தியேட்டர் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை எவ்வளவு வசூல் செய்யப்பட்டது?

(ஆ) அதற்காக ஆன செலவு எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) சென்ற மே மாதம் முடிய ரூபாய் 39,187.37 வசூல் செய்யப்பட்டது.

(ஆ) ரூபாய் 38,338.03 அதற்காக செலவானது.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்ற பாலர் அரங் கங்கள் படங்கள் காட்டுவதற்கு ஜில்லாவுக்கு ஒன்ருக அல்லது முதல் கிரேட் முனிசிபாலிடிக்கு ஒன்ருக ஆரம்பிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குத் திட்டம் எதுவும் இல்லே.

SRI A. GOVINDASAMY : குழந்தைகளுக்கு வேண்டிய படங்களே அரசாங்கம் தயாரித்திருக்கிறதா? இல்லாவிட்டால் அவ்வாறு தயாரிக்க முயற்சி எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் இந்த சொசைடி படம் எடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு ஏற்பாடு செய்திருக்கிறது. மத்திய சர்க்கார் தயாரித்திருந்த படங்களும் வெளிநாட்டிலிருந்து குழந்தைகளுக்காக எடுக்கப்பட்ட படங் களும் இந்த அரங்கில் காண்பிக்கப்படுகின்றன.

SRI A. A. RASHEED : Is there any proposal to allow dramas and cultural shows to be conducted in this theatre?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் இந்த அரங்கம் உபயோகிக்கப்படாத காலத்தில், அந்த நிகழ்ச்சிகளேப் பார்த்து அனுமதி கொடுக்கிருேம்.

Electrification of the houses of plantation labourers

* 153 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தேயிலே, காப்பித் தோட்டங்களிலே வேலே செய்யும் தொழிலாளர்களுடைய குடியிருப்பு விடுகளுக்கு மின்சார விளக் குகள் போடப்படுவது பற்றி அரசாங்கம் பரிசிலனே நடத்துகிறதா?

(ஆ) அப்படியாயின், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.